MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்
சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
MENMATHI KOVAI TAMIL MANDRAM
INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

# திருக்குறளில் உயர்திணைப் பெயர்கள்

**சுகந்தி, சு. & கண்ணன், அர.,**
தமிழ்த்துறை, ஆர்.வி.எஸ். கலை அறிவியல் கல்லூரி, சூலூர், கோவை.

# Exalted Nouns in Thirukkural

**Suganthi, S. & Kannan, R.,**
Department of Tamil, RVS College of Arts and Science, Sulur, Coimbatore.
ORCID ID: https://orcid.org/0000-0003-1098-2327
DOI:

## Abstract

Just as oil is extracted from sesame seeds, grammar emerges from literature. In this vein, Tolkappiyar authored the Tolkappiyam, a foundational treatise on grammar. This article aims to examine how Tiruvalluvar, the renowned author of the Tirukkural, a timeless moral text, utilized the categorization of superior beings outlined in the Tolkappiyam. The superior beings referred to include deities, humans, and divine entities. Through his masterful use of these terms, Valluvar conveys essential moral principles for human existence. Notably, his employment of these nouns encompasses both literal and figurative applications, serving as a testament to his literary skill. Furthermore, Valluvar's insights remain remarkably relevant, offering valuable guidance for contemporary individuals seeking to lead virtuous lives.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

Keywords: Tholkappiyam, Thirukkural, Uyarthinai (Rational Cla), Names, God, People, Father, Mother, Son, Noble.

## ஆய்வுச்சுருக்கம்

எள்ளிலிருந்து எண்ணெய் எடுப்பது போல, இலக்கியங்களிலிருந்து பிறப்பது இலக்கணமாகும். அவ்வகையில் 'தொல்காப்பியம்' என்னும் இலக்கணத்தை இயற்றியுள்ளார் தொல்காப்பியர். இலக்கண நூல்களில் முதன்மையாக விளங்கும் தொல்காப்பியம் குறிப்பிடும் உயர்திணைப் பெயர்களை, உலகப் பொதுமறையாக விளங்கும் திருக்குறளில் திருவள்ளுவர் எவ்வாறு பயன்படுத்தியுள்ளார் என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். உயர்திணைப் பெயர்களாக தெய்வம், மக்கள், தேவர், நரகர் ஆகியன உள்ளன. இப்பெயர்களைக் கொண்டு, உலக வாழ்க்கைத் தேவையான அறக்கருத்துகளை வெளிப்படுத்துகிறார் வள்ளுவர். உயர்திணைப் பெயர்ச் சொற்களை பயன்படுத்தும்பொழுது, அச்சொற்களை பெயர்ச் சொற்களாகவோ, உவமையாகவோ, ஒப்புமையாகவோ பயன்படுத்தியுள்ளார் என்பதை திருக்குறளின்வழி அறியமுடிகின்றது. வள்ளுவரின் கருத்துகள் தற்கால மனிதர்கள் வாழ்வியலில் பின்பற்றக்கூடியதாகவும் உள்ளது.

**Keywords:** தொல்காப்பியம், திருக்குறள், உயர்திணை, பெயர்கள், தெய்வம், மக்கள், தந்தை, தாய், மகன், சான்றோர்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

**முன்னுரை**

உலகச் செம்மொழிகளில் உயர்வான இடத்தைப் பெற்றிருக்கும் தமிழின் முதல் நூலாகவும், முதல் இலக்கண நூலாகவும் தொல்காப்பியம் திகழ்கின்றது. மனிதனின் வாழ்விற்கு இலக்கணம் வகுத்தப் பெருமை தொல்காப்பியரையே சாரும். தொல்காப்பியத்தின் இரண்டாவது பிரிவாக உள்ள சொல்லதிகாரத்தில் ஐந்தாவதாக பெயரை வைத்து, அவற்றில் பெயர் என்றால் என்ன, அவற்றின் வகைகள், எவ்வாறு புணரும் என்பதை தொகுத்துள்ளார். இப்பெயர்ச் சொற்களின் ஒரு கூறாக விளங்கும் உயர்திணை பெயர்களை உலகப் பொதுமறையாக விளங்கும் திருக்குறளில் திருவள்ளுவர் எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார் என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**சொல் பாகுபாடு**

சொற்களைப் பெயர், வினை, இடை, உரியென்று நான்காகப் பாகுபாடு செய்கின்றனர். தமிழ் இலக்கண நூலாசிரியர்கள். இவற்றையெல்லாம் சொல் என்று பெயரிட்டு அழைத்தனர். தொல்காப்பியனார்,

> **“சொல்லெனப் படுப பெயரே வினையென்று**
> **ஆயிரண் டென்ப அறிந்திசி னோரே” (தொல்.சொல்.157)**

> **“இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும்**
> **அவற்றுவழி மருங்கிற்றோன்று மென்ப”**
> **(தொல்.சொல்.158)**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

என்னும் நூற்பாவழி, சொல்லெனப்படுவது பெயரும் வினையும் என்றும், பின்னர் இடை, உரி என்று குறிப்பிடுகின்றார். இவ்வாறே,

**“அயற்சொல் திரிசொல் இயல்பின் பெயர்வினை**
**என இரண்டு ஆகும் இடை உரி அடுத்து**
**நான்குமிழ் திசை வடசொல் அணுகாவழி” (நன்.270)**

என்று நன்னூலாரும் குறிப்பிடுகின்றார். இதன் மூலம் முதன்மைச் சொற்களாக பெயரும், வினையும் இருப்பதையும், அவற்றைச் சார்ந்து இடையும், உரியும் இருப்பதையும் உணரமுடிகின்றது.

**பெயர்ப்பாகுபாடு**

பெயர்ச் சொற்களை உயர்திணைக்குரியன, அஃறிணைக்குரியன, ஆயிரு திணைக்கும் உரியன (விரவுப் பெயர்) என மூன்றாகத் (தொல்.சொல்.160) திணை அடிப்படையாக பாகுபாடு செய்துள்ளார் தொல்காப்பியர். பின்னர் வெவ்வேறு திணைக்குரிய பெயர்ச் சொற்களைக் குறிப்பிட்ட நூற்பாக்களில் தொகுத்துக் காட்டுங்கால் பாலறி வந்த உயர்திணை (தொல்.சொல்.162), பாலறி வந்த அஃறிணை (தொல்.சொல்.167), விரவுத் திணையில் பால் தெரிதல் (தொல்.சொல்.172) ஆகியவற்றையும் புலப்பட வைக்கின்றார். இதன் மூலம் திணைப் பாகுபாட்டின் அடிப்படையாக பால்பாகுபாட்டிற்கு வழிவகுத்துள்ளார் என்பது தெளிவாகிறது. பவணந்தி முனிவர் நன்னூலில் பெயர்ச் சொற்களைத் திணை - பால் அடிப்படையைப் பாகுபாடு செய்துள்ளார். பாலுக்குச் சிறப்பிடம் தருகிறார்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

## உயர்திணைப் பெயர்கள்

தொல்காப்பியரும், பிற இலக்கண நூலாரும் உயர்திணைக்குரியவையாக மக்கள், தேவர், நரகர் என்று பாகுபடுத்தியுள்ளனர். தொல்காப்பியர் மக்களை "ஆறறிவுயிர்" என்கிறார். பிறவாவது தேவர், அசுரர், இயக்கர் என்று பிரிக்கின்றார். இதனை,

**"மக்கள் தேவர் நரகர் உயர்திணை**
**மற்றுயிர் உள்ளவு மில்லவு மஃறிணை" (நன்னூல், நூ.261)**

என்னும் நூற்பாவழி குறிப்பிடுகின்றார்.

உயர்திணைப் பெயர்கள் ஆண்பால், பெண்பால், பலர்பால் என மூன்று பால்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஆண்பால் பெயர்களாக அவன், இவன், உவன், எவன் என்பதும், பெண்பால் பெயர்களாக அவள், இவள், உவள், எவள் என்பதும், பலர்பால் பெயர்களாக அவர்கள், இவர்கள் உவர்கள், எவர்கள் என்று இருபாலரையும் சுட்டி நிற்கிறது.

## திருக்குறளில் உயர்திணைப் பெயர்கள்

உயர்திணைப் பெயர்கள் என்பது மக்கள், கடவுள், தேவர், நரகர், பேடி ஆகியவற்றையும் குறிக்கின்றது. இதனை,

**"தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக் கிழவியும்"**
**(தொல்.சொல்.4)**

என்கிறது தொல்காப்பியம். இதன் மூலம் தெய்வமும் உயர்திணைப் பெயரில் அடங்கும் என்பதை அறியமுடிகின்றது. "இறைவன்" என்ற சொல்லை கடவுள், அரசன் மற்றும் தலைவனைக் குறிப்பிட பயன்படுத்தியுள்ளார்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

7 குறட்பாக்களில் இறைவன் என்ற சொல் கடவுளையும், 3 குறட்பாக்களில் அரசனையும், அடுத்த 3 குறட்பாக்களில் தலைவனையும் குறிக்கின்றது.

**கடவுள்**

அறத்துப்பாலில் பாயிரவியலில் முதலாவது அதிகாரமாக கடவுள் வாழ்த்தைப் பாடியுள்ளார். திருவள்ளுவர் "கடவுள்" என்ற சொல் தலைப்பில் மட்டுமே உள்ளது. வேறு எங்கும் கையாளப்படவில்லை. ஒரு நூலை இயற்றும்பொழுது கடவுளை வாழ்த்திப் பாடுதல் நூலின் இலக்கணங்களில் ஒன்றாக உள்ளது. கடவுளை பகவன், தெய்வம், இறைவன், மேலோர், வானோர் என்று பல பெயர்களிட்டு அழைக்கின்றார். உயர்திணைப் பெயர்களை பெயர்ச் சொல்லாகவும், உவமையாகவும், ஒப்புமைப் பொருளாகவும் குறிப்பிட்டு, அதன்வழி மனித வாழ்க்கைக்குத் தேவையான அறக் கருத்துகளை வெளிப்படுத்துகிறார் வள்ளுவர்.

**பகவன்**

கடவுள் வாழ்த்தின் முதல் குறளில்,

**"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு" (குறள்.1)**

என்றுரைக்கிறார். எழுத்துகள் எல்லாம் அகரமாகிய எழுத்தைத் தமக்கு முதலாக உடையன. அவ்வாறே உலகம் ஆதியாகிய பகவானை முதலாக உடையது என்கிறார்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

**இறைவன்**

கடவுளை “இறைவன்” என்று பெயரிட்டு 5, 10, 690, 778, 733 ஆகிய குறட்பாக்களில் குறிப்பிடுகிறார்.

“இறை” என்ற சொல்லை 10 இடங்களில் பயன்படுத்துகிறார். உண்மையான புகழ் பொருந்திய இறைவன் மீது அன்பு செலுத்துபவர்க்கு, அறியாமையால் ஏற்படும் நல்வினை, தீவினையிரண்டும் உண்டாவதில்லை என்று,

**“இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்**
**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு” (குறள்.5)**

என வரும் குறளில் இறைவனைக் குறித்துப் பாடுகிறார்.

இறைவன் மீது அன்பு செலுத்தினால் மட்டும் போதாது, அவனை எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் பிறவியாகிய பெருங்கடலைக் கடந்து கரை சேர்வார். இதனை,

**“பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவன் அடிசேரா தவர்” (குறள்.10)**

என்னும் குறட்பாவழி எடுத்துரைக்கின்றார்.

**தெய்வம்**

தெய்வம் என்ற சொல் 43, 50, 55, 619, 702, 1023 ஆகிய குறட்பாக்களில் வள்ளுவர் பயன்படுத்தியுள்ளார். பிதிரர், தெய்வம், புதியவர், சுற்றத்தார், தான் என்னும் ஐந்து பிரிவினரிடத்தும் செய்ய வேண்டுவனவற்றைத் தவறாது செய்வது முதன்மையான அறமாகும்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

இல்வாழ்வானின் கடமைகளில் ஒன்று தெய்வத்திற்குரிய வழிபாடுகளையும், பூசை முதலிய நெறிகளையும் வழுவாமல் பாதுகாத்தல் சிறப்புடைய அறம் என்கிறார் வள்ளுவர்.

**“தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல்தான் என்றாங்கு**

**ஐம்புலத்தா றோம்பல் தலை” (குறள்.43)**

என்பது குறளாகும்.

இப்பூவுலகில் இல்லறக் கடமைகளைச் சரியாகச் செய்து வாழ்பவன், வானில் உறையும் இறைவனொடு ஒப்ப எண்ணப்படுவான் என்று ஒப்புமைப்பொருளில்,

**“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**

**தெய்வத்துள் வைக்கப் படும்” (குறள்.50)**

என்னும் குறளில் “தெய்வம்” என்னும் உயர்திணைப் பெயரைப் பயன்படுத்தியுள்ளார்.

கற்புடையப் பெண்கள் தெய்வத்தைத் தொழ வேண்டாம். தன் கணவனையே தெய்வமாக வழிபட்டால், பெய்வாயாக என்று சொன்ன அளவிலே மழைப் பெய்யுமென்று கற்புடையப் பெண்களைச் சிறப்பிக்கின்றார் வள்ளுவர்.

**“தெய்வந் தொழாஅள் கொழுநள் றொழுதெழுவாள்**

**பெய்யெனப் பெய்யும் மழை” (குறள்.55)**

இக்குறளில் இல்வாழ்க்கை நலமாக அமைய, கணவனையே தெய்வமாக வழிபடுதல் கற்புடைய மகளிரின் கடன் என்கிறார் வள்ளுவர். இக்குறளுக்கு உரை தரும் பரிதியார்,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

**“குலதேவதையைக் கும்பிடாள் தன் பத்தாவைத் தெய்வமென்று தொழுதபடியால் அவள் சொல்ல மழை பெய்யும் என்றவாறு” (ப.50)**

என்கிறார். இதில் தெய்வத்தைக் “குலதேவதை” என்று பெண் தெய்வமாகச் சுட்டுகிறார்.

**திருமகள்**

அறத்தின் தன்மையை அறிந்து பிறர் பொருளை விரும்பாத அறிவுடையாரைத் திருமகள் விரைந்து சேர்வாள் என,

**“அறனறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்**
**திறனறிந் தாங்கே திரு” (குறள்.179)**

என்னும் குறளில் குறிப்பிடுகிறார் வள்ளுவர். இக்குறளில் வரும் “திரு” என்னும் சொல்லிற்கு உரை தரும் ஆசிரியர்கள் செல்வம் என்றும், ஒரு சிலர் “திருமகள்” என்றும் மொழிகின்றனர்.

**“அறத்தை அறிந்து பிறர் பொருளை விரும்பாத அறிவு உடையாரைத் திருமகள் தானே தகுதி அறிந்து அப்போதே சேரும் என்றவாறு” (ப.142)**

என்று உரை தருகின்றார் மணக்குடவர்.

**“நன்னெறியின் வந்த பொருளைக் கொண்டு வாழ்வதே நமக்கு அறமாவது என்றறிந்து நெறியல்லனவற்றை விரும்பா அறிவுடையாளரைச் சென்று சேரும், செல்வமானது என்றவாறு என்று திருவிற்கு “செல்வம்” (ப.142)**

என்று பொருள் தருகிறார் காலிங்கர்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

**“வினைக்கண் வினையுடையான் கேண்மை வேறாக**
**நினைப்பானை நீங்கும் திரு” (குறள்.519)**

வினையிடத்து வினைசெய்ய வல்லவனது நட்பை வேறுபாடாக நினைக்குமவனைத் திருமகள் நீங்குவாள் என்பது பொருளாகும். இக்குறளில் வரும் திருவிற்கு செல்வம் என்றே காலிங்கரும், பரிப்பெருமாளும் உரை தருகின்றனர்.

மற்றொரு குறளிலும் “திரு” என்பதற்கு மாறுபட்ட உரையைத் தருகின்றனர் உரையாசிரியர்கள்.

**“இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்**
**திருநீக்கப் பட்டார் தொடர்பு” (குறள்.920)**

கவர்த்த மனத்தையுடைய மகளிரும், கள்ளும், சூதும் என இம்மூன்றும் திருமகளால் துறக்கப்பட்டார்க்கு நட்பு என்பது பொருளாகும். திருமகளை “செய்யவள்” என்று,

**“அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவள்**
**தவ்வையைக் காட்டி விடும்” (குறள்.167)**

என்னும் குறட்பாவழி திருவள்ளுவர் குறிப்பிடுகிறார். பிறர் செல்வம் கண்டு பொறாமை அடைபவனைத் திருமகள் தானும் பெறாமல், தனக்கு மூத்தவளாகிய பூதேவியை அவனிடத்துச் செலுத்திவிட்டு தான் நீங்கிப் போவாள்.

**இந்திரன்**

இந்திரன் மருதநிலக் கடவுளாகப் போற்றப்படுகிறார். தொல்காப்பியர்,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

**“வேந்தன் மேய தீம்புனல் உலகமும்”**
**(தொல்.பொருள்.அகத்.5)**

என்று இந்திரனை தீம்புனல் உலகமாகிய மருதநிலக் கடவுளாகக் குறிப்பிடுகிறார். புறநானூறு “வச்சிரத் தடக்கை நெடியோன்” என்று இந்திரனைக் குறிப்பிடுகிறது.

**“திண்தேர் இரவலர்க்கு ஈத்த தண்தார்**
**அண்மான் வருஉம் என்ன, ஒண்தொடி**
**வச்சிரத் தடக்கை நெடியோன்” (புறம்.241)**

இந்திரன் கோயிலில் அண்டிரனை வரவேற்கும் முரசு முழக்கம் கேட்டதாக மேற்கண்ட பாடல் மொழிகின்றது. சிலப்பதிகாரம், “மாலை வெண்குடை மன்னவன்” (சிலம்பு., இந்திரவிழவூரெடுத்த காதை, 173), “விண்ணவர் கோமான்” (சிலம்பு., காடுகாண் காதை, 98), மணிமேகலா (சிலம்பு., மலர்வனம் புக்கக் காதை, 45) என்கிறது.

**“ஐந்தவித்தா னாற்றல் அகல்விசும்பு ளார்கோமான்**
**இந்திரனே சாலுங் கரி” (குறள்.25)**

ஐம்புலன்களையும் தீயவழியில் செல்லாமல் அடக்கினவனது ஆற்றலுக்கு, அகன்ற வானத்துத் தேவர்களின் தலைவனாகிய இந்திரனே சாட்சியாகும். இதில், ஐம்புலன்களையும் அடக்கி ஆள்பவனுக்கு, இந்திரனின் ஆற்றலை ஒப்பிட்டுக் காட்டுகிறார் வள்ளுவர்.

**மக்கள்**

உயர்திணைப் பெயரில் மக்கள் என்று ஆண்பால், பெண்பால், பலர்பால் ஆகியவற்றைக் குறித்து நிற்கிறது. உலகில் வாழும் அனைத்து மனித இனத்தையும் குறிக்கின்றது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

மனித இனம் அழியாமல் இருப்பதற்கு “மக்கட்பேறு” அடிப்படை என்ற நோக்கில் “மக்கட்பேறு” என்று ஒரு தனி அதிகாரமே படைத்துள்ளார் வள்ளுவர். வேறு செல்வத்தைவிட மக்கட் செல்வமே சிறந்தது என்று,

**“பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த**
**மக்கட் பேறு அல்ல” (குறள்.61)**

என்னும் குறட்பாவழி எடுத்துரைக்கிறார். அஃறிணை வழியே உயர்திணை மக்கள் பின்பற்றக்கூடிய வாழ்வியல் நெறிகளை வெளிப்படுத்துவதால் 133 அதிகாரங்களிலும் உயர்திணைப் பெயரினைப் பயன்படுத்தியுள்ளார் வள்ளுவர்.

**சான்றோர்**

அறிவிலும், உயர்ந்த பண்பிலும் உயர்ந்தோர் சான்றோர் ஆவர். உயர்திணைப் பெயராகிய சான்றோர் என்னும் சொல்லின்வழி சான்றோர் என்பவர் யார், அவர்க்குரிய குணநலன்கள் எவை எவை என்பதை குறள்வழி விளக்குகிறார் வள்ளுவர். கேடுதல் வருதலும், செல்வம் வருதலும் முன்னை வினையால் அமைந்தவை. அதனை எண்ணி மனம் கோணாது இருத்தல் சான்றோர்க்கு அணியாகும் என்று,

**“கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்**
**கோடாமை சான்றோர்க் கணி” (குறள்.115)**

எனும் குறள் வெளிப்படுத்துகிறது. “சான்றோர்” என்பவர் எப்படி இருக்க வேண்டும் என்பதை,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

**“சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்**
**கோடாமை சான்றோர்க் கணி” (குறள்.118)**

என்னும் குறள் உணர்த்துகிறது. முன்னே தான் சமமாக நின்று பின் தன்னிடத்து வைத்த எடையை அளவிட்டுக் காட்டும் தராசு போல, அறிவால் எண்ணி ஒரு பக்கம் சாராமையே சான்றோர்க்கு அழகாகும். நடுநிலையுடன் வாழ்வது ஒரு அணிகலன் என்றால், நாணத்துடன் வாழ்வது மற்றொரு அணிகலன் என்று,

**“அணியன்றோ நாணுடைமை சான்றோர்க்கஃது இன்றேல்**
**பிணியன்றோ பீடு நடை” (குறள்.1014)**

என்னும் குறள்வழி புலப்படுத்துகிறார் வள்ளுவர்.

ஒருவன் கோல் போல் நடுநிலையுடன் வாழ்ந்த சான்றோரைப் பற்றி,

**“செற்றமும் உவகையும் செய்யாது சாத்து**
**நெமன்கோல் அன்ன செம்மைத்து ஆகி”**
**(மதுரைக்காஞ்சி 490-491)**

என்னும் சங்கப்பாடல் விளக்குகிறது. புறநானூறு,

**“ஆன்று ஆய்ந்து அடங்கிய கொள்கை உடையவர்கள்”**
**(புறம்.191)**

என்று சான்றோரைப் போற்றுகின்றது.

**இறந்தும் உள்ளார்**

நாட்டிற்கும், உலகிற்கும் பயன்படும் நல்வாழ்வு வாழ்பவரின் பூதவுடல் அழிந்தாலும் புகழுடல் நிலைத்திருக்கும். அத்தகையோரைக் காட்டும் குறட்பாக்கள் பின்வருமாறு:

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

**வித்தகர்**

புகழுடம்பு வளரப் பூதவுடம்பு இளைத்தலும், புகழ் நிலைத்து நிற்கப் பூதவுடம்பு இறத்தலும் வல்லவர்க்கல்லது பிறர்க்கு இயலாததாகும்.

**"நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்**
**வித்தகர்க்கு கல்லார் அரிது" (குறள்.235)**

இக்குறளில் "வித்தகர்" என்னும் உயர்திணைப் பெயர் வல்லவர், ஆற்றலுடையவர், அறிவுடையவர், பேரறிஞர் என்ற பொருளைத் தருகின்றது.

**பேராண்மை**

பிறன்மனை நோக்காத ஆடவரை "பேராண்மை" என்ற சொல்லால் குறிப்பிடுகிறார் வள்ளுவர். பிறன்மனைவியை நோக்காத பேராண்மை சான்றோரின் அறமட்டுமன்று, நிறைவான ஒழுக்கமும்கூட என்கிறார்.

**"பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்**
**கறன்ஒன்றே ஆன்ற ஒழுக்கு" (குறள்.148)**

என்பது குறள்.

**பெரியவர்**

உண்மையானப் பெரியவர் யார் என்பதை,

**"உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்**
**இன்னாச்சொல் நோற்பாரின் பின்" (குறள்.160)**

என்னும் குறள்வழி வெளிப்படுத்துகிறார் வள்ளுவர்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

பசி பொறுத்து உண்ணா நோன்பு இருக்கும் உறுதிப்படைத்தவர்களும், பிறர் கூறும் கொடுஞ்சொற்களைப் பொறுத்துக் கொள்பவர்களுக்கு அடுத்த நிலையில்தான் வைத்துப் போற்றப்படுவர் என்பதன் மூலம் பொறையுடைமையின் சிறப்பினை அறியமுடிகிறது. நற்பண்புகளைக் கடைப்பிடித்து ஒழுகினால் மட்டும் போதாது, பிறர் செய்யும் துன்பங்களையும் பொறுத்துக் கொள்ள வேண்டும். அதுவே உண்மையானப் பண்பு என்பதை அறியமுடிகிறது.

**இறப்பு நிலை**

உயிருடன் வாழ்பவன் என்று சொல்லப்படுபவன் உலகிற்குத் தேவையானவை அறிந்து செய்யபவனாவான். அவ்வாறு செய்யாதவன், உயிர் வாழ்ந்தாலும் இறந்தவனாகவே எண்ணப்படுவான் எனும் கருத்தில்,

**“ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்**
**செத்தாருள் வைக்கப் படும்” (குறள்.214)**

என்ற குறளை இயற்றியுள்ளார் வள்ளுவர். “அறிவான்” என்பது உயர்திணைப் பெயராகும்.

**பேய்நிலை**

உலகத்தார் உண்டு என்று சொல்வதை இல்லை என்று கூறுகின்ற ஒருவன் உலகத்தில் காணப்படும் ஒரு பேயாகக் கருதி விளக்கபப்டுவான். இதனை,

**“உலகத்தார் உண்டென்பது இல்லென்பான் வையத்து**
**அலகையா வைக்கப் படும்” (குறள்.850)**

எனும் குறள்வழி அறியலாம். உலகத்தார் என்பது மக்கள் அனைவரையும் குறித்து நிற்கும் உயர்திணைப் பெயராகும்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

இல்லென்பான் இதில் வரும் "இல்லை" என்பது எதிர்மறைப் பெயர்ச் சொல்லாகும். "என்பான்" என்பது ஆண்பாற் பெயர். இரண்டும் இணைந்து வந்துள்ளது.

**தாய் - மகன்**

"தாய்" என்பது உயர்திணைப் பெண்பாலையும், "மகன்" சான்றோன் எனப்து உயர்திணை ஆண்பாலையும் சுட்டி நிற்கிறது. இவ்விரண்டுச் சொற்களையும் பயன்படுத்தி,

**"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக்கேட்ட தாய்" (குறள்.69)**

எனும் குறள்வழி வாழ்வியல் கருத்துகளைப் புலப்படுத்துகிறார் வள்ளுவர். தன் மகனைச் சான்றோன் எனப் பிறர் சொல்லக் கேட்ட தாய், அவனை ஈன்றப் பொழுதைவிட பெரிதும் மகிழ்ந்தாள் என்பது பொருளாகும்.

தன்னைப் பெற்ற தாயின் பசித் துன்பத்தைக் கண்ணால் கண்ட போதிலும், மேலோர்கள் பழிக்கும் செயல்களை செய்யக் கூடாது என்று ஒருவனின் அறஒழுக்கத்தை முன்னிறுத்துகிறார் வள்ளுவர்.

**"ஈன்றாள் பசிகாண்டாள் ஆயினும் செய்யற்க**
**சான்றோர் பழிக்கும் வினை" (குறள்.656)**

"சான்றோர்" என்னும் சொல் உயர்திணை பண்புப் பெயராகும்.

ஈன்ற பொழுதைவிட தன் மகனைச் சான்றோன் என அறிந்த தாயின் உவகையை,

**"ஈன்ற ஞான்றினும் பெரிதுவந்தனளே" (புறம்.278)**

எனும் புறப்பாடல் உணர்த்தி நிற்கிறது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

ஈன்று புறந்தருதல் தாயின் கடன் என்றால். அவனைச் சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனென்று,

**“ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே**
**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே” (புறம்.312)**

என வரும் புறப்பாடல்வழி அறியமுடிகிறது.

**தந்தை - மகன்**

“தந்தை”, “மகன்” என்பது உயத்திணை ஆண்பாற் பெயர்ச் சொல்லாகும். தந்தை தன் மகனுக்கு ஆற்ற வண்டிய உதவி, அவன் கற்றவர் கூட்டத்தில் மேலோங்கித் திகழும்படி கல்விப் புகட்டுதல் என்கிறார் வள்ளுவர். இதனை,

**“தந்தை மகன்காற்றும் நன்று அவையத்து**
**முந்தி யிருப்பச் செயல்” (குறள்.67)**

எனும் குறளால் அறியலாம். மகனை நற்பண்புகளை உடையவனாக உருவாக்குதல் தந்தையின் கடன் என்றால், மகனின் கடன் என்ன என்பதை,

**“மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை**
**என்நோற்றான் கொல்லெனும் சொல்” (குறள்.70)**

எனும் குறள் விளக்கும். இவனைப் பிள்ளையாகப் பெற்றது, இவன் தந்தைப் பெற்ற பெரும்பேறு என்று ஒரு மகன் புகழப்படுவதுதான், அவன் தன்னுடைய தந்தைக்குச் செய்யக் கூடிய கைம்மாறு எனப்படும்.

**உலக நிலையாமை**

ஒருவன் நேற்று உளனாயிருந்தான், இன்று இல்லையாயினாயின் என்று சொல்லும் பெருமையை இவ்வுலகம் உடைத்து என்று,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

**"நெடுநல் உளனொருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை உடைத்திவ் வுலகு" (குறள்.336)**

என வரும் குறள் மொழிகின்றது. "ஒருவன்" என்பது உயர்திணை ஆண்பாற் பெயரானாலும், பெண்பாற்குரியதாகும். சிறப்புக்கருதி ஆண்பாற்கே கூறினார் வள்ளுவர்.

## தெய்வத்தோடு ஒப்புமை

ஒருவனின் மனக்கருத்தை ஐயத்திற்கு இடமில்லாமல் கண்டு கொள்ளும் ஆற்றல் உள்ளவனை தெய்வத்திற்குச் சமமாக மதிக்க வேண்டும் என்று,

**"ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத்**
**தெய்வத்தோ டொப்பக் கொளல்" (குறள்.720)**

என்னும் குறள் உணர்த்துகிறது. "உணர்வான்" என்னும் சொல் வினையால் அணையும் பெயராகும்.

## முடிவுரை

இலக்கண நூலார் குறிப்பிடும் உயர்திணைப் பெயர்ச் சொற்களை தமது குறளின்வழி வெளிப்படுத்தி, மனித வாழ்க்கைக்குத் தேவையான அறக்கருத்துகளை வள்ளுவர் பாடியுள்ளார். ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டும் என்பதையும், எப்படியெல்லாம் வாழக்கூடாது என்பதையும் சிறந்த சொற்களைத் தேர்ந்தெடுத்து இரண்டடியில் உலகிற்கு உணர்த்தியிருபப்து வள்ளுவரின் தனிச்சிறப்பாக உள்ளது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

## துணைநூற் பட்டியல்

1. இளம்பூரணர் (உ.ஆ.), 1973. தொல்காப்பியம் - சொல்லதிகாரம், முதற்பதிப்பு, சாரதா பதிப்பகம், சென்னை.
2. இளவரசு, சோம. (உ.ஆ.), 2004. நன்னூல் - சொல்லதிகாரம், முதற்பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
3. சோமசுந்தரனார், பொ.வே. (உ.ஆ.), 2008. புறநானூறு, ஐந்தாம் பதிப்பு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
4. வெள்ளைவாரணம், பேராசிரியர் தா.ம., 1983. திருக்குறள் உரைக்கொத்து, அறத்துப்பால் - பரிமேலழகர், மணக்குடவர், பரிதியார், காலிங்கர் உரைகளுடன், ஐந்தாம் பதிப்பு, செந்தமிழ் கல்லூரி, திருப்பனந்தாள்.
5. வெள்ளைவாரணம், பேராசிரியர் தா.ம., 2002. திருக்குறள் உரைக்கொத்து, பொருட்பால் - பரிமேலழகர், மணக்குடவர், பரிதியார், காலிங்கர் உரைகளுடன், நான்காம் பதிப்பு, காசித் திருமடம், திருப்பனந்தாள்.
6. வெள்ளைவாரணம், பேராசிரியர் தா.ம., 1958. திருக்குறள் உரைக்கொத்து, காமத்துப்பால் - பரிமேலழகர், மணக்குடவர், பரிப்பெருமாள், பரிதியார், காலிங்கர் உரைகளுடன், திருக்குறள் பதிப்பு நிதி வெளியீடு, சென்னை.
7. வேங்கடசாமி நாட்டார், ந.மு. (உ.ஆ.), 2008. சிலப்பதிகாரம், ராமையா பதிப்பகம், சென்னை.
8. வேங்கடசாமி நாட்டார், ந.மு. & துரைசாமிப்பிள்ளை, ஔவை சு., 1994. மணிமேகலை, மூன்றாம் பதிப்பு, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

## References

1. Ilampooranar (Ed.), 1973. Tholkappiyam - Sollathikaram, First Edition, Saratha Pathippagam, Chennai.
2. Ilavarasu, Soma. (Ed.), 2004. Nannool - Sollathikaram, First Edition, Manivasagar Pathippagam, Chennai.
3. Somasundaranar, P.V. (Ed.), 2008. Puranooru, Fifth Edition, Saiva Siddhantha Noorpathippu Kazhagam, Chennai.
4. Vellaivaranam, Perasiyar T.M., 1983. Thirukkural Uraikkoththu, Arathupaal - Parimelazhagar, Manakudavar, Parithiyar, Kalingar Uraikaludan, Fifth Edition, Senthamil College, Thiruppanandal.
5. Vellaivaranam, Perasiyar T.M., 2002. Thirukkural Uraikkoththu, Porulpaal- Parimelazhagar, Manakudavar, Parithiyar, Kalingar Uraikaludan, Fourth Edition, Kasi Thirumadam, Thiruppanandal.
6. Vellaivaranam, Perasiyar T.M., 1958. Thirukkural Uraikkoththu, Kaamathupaal - Parimelazhagar, Manakudavar, Parithiyar, Kalingar Uraikaludan, Thirukkural Pathippu Nithi Veliyeedu, Chennai.
7. Venkadasamy Nattar, N.M. (Ed.), 2008. Silappathikaram, Ramaya Pathippagam, Chennai.
8. Venkadasamy Nattar, N.M. & Duraisamypillai, Avvai Su., 1994. Manimekalai, Third Edition, Thenninthiya Saiva Siddhantha Noorpathippu Kazhagam, Chennai.